**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.66/2025 - PW-3**

| | |
|---|---|
| Name | திரு. மணிகண்டன் |
| Husband/Father Name | வெங்கடேசன் |
| Village /Area | நெல்வாய் |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 25 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 29.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அசா.1 மற்றும் அசா.2 என்னுடைய நண்பர்கள். இறந்த தமிழரசன் என் நண்பர் ஆவார். கடந்த 16.01.2025 அன்று நானும் சங்கர் மற்றும் கோகுல் மூவரும் பனப்பாக்கம் சென்று என்னுடைய வாகனத்திற்கு பெட்ரோல் போட்டுக்கொண்டு தாபாவில் சென்று சாப்பிட்டு விட்டு வீட்டிற்கு கோகுலை இறக்கி விட்டுவிட்டு மறுபடியும் திருமால்பூர் சென்று கூல்டிரிங்ஸ் சாப்பிட்டு விட்டு வரும் போது வீர சீரக பாலத்தின் அருகே தமிழரசனும், விஜய கணபதியும் நின்றுக் கொண்டிருந்தார்கள்.

அங்கு நின்று நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பிரேம்குமாரும் அவருடன் 5 நபர்களும் இரண்டு இரு சக்கர வானத்தில் வந்தார்கள். பிரேம்குமார் என்பவர் நானே ஊரில் பெரிய ரௌடி என்னுடைய பைக்கையே வழி மடக்குகிறாயா என்று தமிழரசனை பார்த்து ங்கோத்தா தெவிடியா பைய்யா என்று திட்டி எட்டி காலால்

உதைத்தார். அப்போது தடுக்க சென்ற விஜய கணபதியின் முகத்தின் மீது அடித்தார் அப்போது நானும் சங்கரும் வண்டியில் இருந்து இறங்கி கேட்ட போது சங்கர் கையில் இருந்த பெட்ரோல் பாட்டிலை பிடிங்கி பிரேம்குமார் தமிழரசனின் மீது ஊற்றினார் அது விஜய கணபதியின் மீதும் பட்டது.

பிறகு உடன் இருந்த நபர்கள் டேய் மச்சான் அவவை ஊற்றி கொளுத்தி சாகடிடா என்று கூறினார்கள். அப்போது பிரேம்குமார் தீப்பெட்டி எடுத்து கொளுத்தி தமிழரசன் மீது போட்டார். தமிழரசன் தீப்பற்றி எரிந்த போது அவரை அணைக்க முற்பட்ட போது தீ விஜய கணபதியின் முதுகில் பற்றிக்கொண்டது. அப்போது தமிழரசனும் விஜய கணபதியும் சத்தம் போடாவே பாண்டியன் மற்றும் கோகிலா என்பவரும் அங்கு ஓடி வந்து பற்றி எரிந்தவரை பாண்டியன் கட்டியிருந்த லுங்கியை அவிழ்த்து அவர் மீது போர்த்தி அணைத்தார்.

கோகிலா என்பவர் அவர் மீது போட்டிருந்த துண்டை எடுத்து விஜய கணபதியின் மீது போர்த்தி தீயை அணைத்தார். பிறகு 108 ஆம்புலன்சிற்கு தகவல் அளித்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு காயம் பட்டவர்களை அழைத்துச் சென்றார்கள். பிறகு மேல் சிகிச்சைக்காக சென்னை KMC மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

எனது வண்டிக்கு பெட்ரோல் போடுவதற்காக நாங்கள் மூவரும் சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் மூவரும் ெஹல்மெட் அணிந்திருந்தோமா என்றால் இல்லை. இரு சக்கர வாகனத்தில் மூவர் செல்லக்கூடாது என்றும் தலைக்கவசம் வாகனம்

ஓட்டும் போது அவசியம் என்ற விவரமும் எனக்கு தெரியும். சட்டம் தெரிந்தும் நாங்கள் தவறு செய்தோம் என்று சொன்னால் சரிதான். சம்பவ தினம் பண்டிகை தினம் என்றும் அன்று அனைவரும் கூட்டாக கறி சோறு சாப்பிடும் தினம் என்று சொன்னால் சரிதான். அன்று எங்கள் குடுப்பத்தாருடன் வீட்டில் சமைத்து கறிசோறு சாப்பிட்டோம் என்று சொன்னால் சரிதான்.

நாங்கள் மூவரும் பெட்ரோல் வாங்குவதற்காக மட்டும் தான் சென்றோமா என்றால் இல்லை. சாப்பிட்டு விட்டு பெட்ரோல் வாங்க சென்றோம். எங்கள் மூவருக்கும் மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் சங்கர் மற்றும் கோகுலுக்கு கிடையாது எனக்கு மட்டும் உண்டு. அன்றைய தினம் பண்டிகை தினம் என்பதால் நான் மட்டும் மது அருந்தியிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

நாங்கள் சாப்பிடுவதற்காக தான் சென்றோம் அதன் பிறகு தான் பெட்ரோல் போட சென்றோம். ஊரில் இருந்து கிளம்பும் போது என்ன காரணத்திற்காக நாங்கள் சென்றோம் என்றால் சாப்பிடுவதற்காக தான் சென்றோம். பிறகு சாட்சி ஊரில் இருந்து கிளம்பும் போது குறுக்கு வழியாக சென்றால் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் வாங்கிக்கொண்டு சென்று பிறகு சாப்பிடலாம் என்று நினைத்தோம்.

பெட்ரோல் பங்கில் வாட்டர் பாட்டிலில் பெட்ரோல் தரமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல தந்ததால் தான் வாங்கி வந்தோம். பெட்ரோல் வாங்கிவிட்டு சாப்பிட சென்ற விஷயத்தை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். பெட்ரோல் வாட்டர் கேனை வீட்டில் இருந்து தான் எடுத்து சென்றோமா என்றால் சரியல்ல பெட்ரோல் பங்கில் தான் எடுத்தோம்.

1 லிட்டர் பெட்ரோலை ரூபாய் 100 க்கு வாங்கினோம். நாங்கள்

வாங்கியதாக கூறும் பெட்ரோல் பாட்டில் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகளை அனைவரையும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அவர்கள் திருமால்பூர் காலனியை சார்ந்தவர்கள். காலனியில் எந்த வகுப்பினர் வசிப்பார்கள் என்று எனக்கு தெரியாது. காலனிக்கும் ஊருக்கும் உள்ள வித்தியாசம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

பொதுவாக பண்டிகை கால நேரத்தில் ஓட்டல்கள் மற்றும் தாபாக்கள் முடிவிடுவார்கள் என்று சொன்னால் சரிதான். நாங்கள் சென்று சாப்பிட்டதாக கூறும் தாபாவும் விடுமுறையில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல திறந்திருந்தது. நாங்கள் தாபாவில் சாப்பிட்ட விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன். நாங்கள் பெட்ரோல் வாங்கிக்கொண்டு தாபாவில் சாப்பிட்டு விட்டு எங்கள் ஊருக்கு வந்துவிட்டோம்.

கூல்டிரிங்ஸ்க்கும், ஜுஸ்க்கும் வித்தியாசம் உள்ளது தெரியமா என்றால் தெரியும். கோகுலை ஊரில் விட்டுவிட்டு நானும் சங்கரும் தான் கூல்டிரிங்ஸ் குடிக்க சென்றோம். கூல்டிரிங்ஸ் குடிக்கும் போதும் சங்கர் கையில் தான் பெட்ரோல் பாட்டில் இருந்து என்று சொன்னால் சரிதான். கூல்டிரிங்ஸ் குடித்துவிட்டு சம்பவ இடத்திற்கு வரும் போது சம்பவ இடத்தில் தமிழரசனும், விஜய கணபதியும் தான் இருந்தார்கள் அப்போது நேரம் மாலை 05.00 முதல் 05.30 வரையிருக்கும்.

சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு யார் எந்த இடத்திற்கு வந்தார்கள் என்றால் அரசு பள்ளிக்கு பின்னால் இருந்து 2 பைக்கில் 5 நபர்கள் வந்தார்கள். அந்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன். என்னிடமும் சங்கரிடமும் கோகுலிடமும் கைப்பேசி

இருந்தது என்று சொன்னால் சரிதான். கோகுலின் வீட்டிற்கு பின்னால் சங்கரின் வீடு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. சங்கர் வீடு அங்கிருந்து 250 – 300 மீட்டர் தூரம் இருக்கும். நான் கூறுகின்ற மீட்டர் பக்கமாக தூரமா என்றால் பக்கம்தான். பிறகு சாட்சி கோகுலை ரோட்டில் தான் இறக்கிவிட்டதாக கூறினார் அந்த ரோட்டிற்கும் சங்கர் வீட்டிற்கும் உள்ள தொலைவு 250 –300 மீட்டர் இருக்கும் பட்சத்தில் என்ன காரணத்தினால் நாங்கள் வாங்கிய பெட்ரோலை ஊற்ற முற்படவில்லை என்றால் ஜுஸ் குடித்துவிட்டு பிறகு ஊற்றிக் கொள்ளலாம் என்று நினைத்தோம்.

சம்பவம் முன் தினம் எதிரி பிரேம்குமாருக்கும் தமிழரசனுக்கும் சண்டை நடந்த விவரம் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதனால் தான் நாங்கள் பெட்ரோல் கேனை வைத்துக்கொண்டு ஊர் ஊராக சுற்றி தமிழரசனையும் விஜயகணபதியையும் சம்பவ இடத்திற்கு வரச் சொன்னோம் என்று சொன்னால் நாங்கள் வர சொல்லவில்லை. ஏதேச்சையாக வந்தார்கள். கோகுல் மூலமாக தான் பிரேம்குமார் வருவதை நாங்கள் தெரிந்துக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. பிரேம்குமார் வரும் போது பெட்ரோல் யார் கையில் இருந்தது என்றால் சங்கரிடம் தான் இருந்தது.

பிரேம்குமார் பைக்கில் வருவதை தெரிந்துக்கொண்டு சங்கர் பிரேம்குமாரின் மீது பெட்ரோல் ஊற்றுவதாக நினைத்து கொண்டு தமிழரசன் மீதும் விஜய கணபதின் மீதும் ஊற்றினார் என்று சொன்னால் சரியல்ல. ஊற்றிய வேகத்தில் தீயையும் கொளுத்தி சங்கர் தமிழரசன் மீது விஜய கணபதியின் மீது போட்டுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. பிரேம்குமார் வந்த வண்டியை அவர் தான் ஓட்டி வந்தார். பிரேம்குமார் வண்டியை ஓட்டும் போது பெட்ரோல் கேனை

அவரால் சங்கரிடம் இருந்து பிடிங்கியிருக்க முடியாது என்று சொன்னால் அவர் வண்டியை நிறுத்தி தான் சங்கரிடம் இருந்து பெட்ரோல் பாட்டிலை பிடிங்கினார். அதை தடுக்க முயற்சித்தோமா என்றால் அவர் பிடிங்கிய உடனேயே ஊற்றிவிட்டார்.

நான் மேற்படி விவரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். சங்கரினுடைய வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் இடைப்பட்ட தொலைவு 500 – 600 மீட்டர் இருக்கும். சம்பவ இடத்திற்கு அந்த நேரம் கோகிலா எதற்காக வந்தார் என்று எனக்கு தெரியமா என்றால் எனக்கு தெரியாது.

பிரேம்குமாரை பெட்ரோல் ஊற்றி கொளுத்த வேண்டி திட்டம் தீட்டி பிரேம்குமார் வருவதை கோகுல் மூலமாக தெரிந்து கொண்டு சங்கர் பதட்டத்தில் பிரேம் குமார் மீது ஊற்றுவதாக நினைத்து தமிழரசன் மீதும் விஜய கணபதி மீதும் ஊற்றி விட்டார் என்றும் அதே பதற்றத்தில் தீக்குச்சியை தமிழரசன் மீது வீசியதால் அது விஜய கணதிக்கு பரவி தீக்காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

தீப்பற்றி எரியும் போது நானோ சங்கரோ அவர்களை காப்பற்றுவதற்காக எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால் தவறு நாங்கள் காப்பாற்ற முயற்சி செய்தோம். கத்திக்கொண்டே நாங்கள் காப்பற்ற முயன்ற போது தான் பாண்டியனும் அங்கு ஓடி வந்தார். பாண்டியன் திருமால்பூர் அரசு பள்ளியின் உள்ள கிரவுண்டில் இருந்து தான் ஓடிவந்தார். சம்பவ இடத்திற்கும் கிரவுண்டிற்கும் 30 மீட்டர் இருக்கும், அன்றைய தினம் பள்ளி விடுமுறை என்று சொன்னால் சரிதான் அந்த பள்ளி கிரவுண்டில் இருந்து ஓடி வந்தாலோ மதில் சுவரை தாண்டி வந்திருந்தாலோ சம்பவ இடத்தற்கு வந்திருக்க முடியாது என்று சொன்னால் அந்த பள்ளியினுடைய கேட்டில்

கிரிக்கெட் விளையாடுபர்களுக்காகவே சிறிய கேட்டை திறந்து வைத்திருப்பார்கள்.

இந்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. அரசு விடுமுறை நாட்களில் அந்த பள்ளியின் கேட்டும் பூட்டப்பட்டிருந்தது என்றும் அதனால் தான் மேற்படி விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் கூறாமால் தற்போது புதிதாக கூறுகிறனே் என்றால் சரியல்ல. என்னை போலீசார் 1 முறை எங்கள் வீட்டில் DSP விசாரித்தார். அவர் பெயர் தெரியாது. சங்கர் கூறி தான் என்னை விசாரித்த நபர் DSP எனத் தெரியும். என்னையும் சங்கரையும் தான் DSP சம்பவம் எப்படி நடந்தது என்பது பற்றி விசாரித்தார் அவரை தவிர என்னை வேறு யாரும் விசாரிக்கவில்லை.

நாங்கள் பிரேம் குமாருக்கு தீயை வைத்து பெட்ரோல் ஊற்றி கொளுத்த வேண்டும் என்ற காரணத்தினால் சங்கர் தமிழரசன் மற்றும் விஜய கணபதியின் மீது தீயை கொளுத்தினார் என்பதால் தான் நாஙக்ள இருவரும் தமிழரசனையும் விஜய கணபதியையும் காப்பற்ற எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றும் மேலும் சங்கர் தயார் கோகிலா அணிந்திருந்த டவலை வாங்கி விஜய கணபதியின் தீயை அணைத்ததாக கூறும் விஷயம் முற்றிலும் தவறு என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறும் தினத்தன்று பனப்பாகக்த்திலும் நெமிலியிலும் பல போராட்டங்கள் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். அதோ போல் திருமால்பூரிலும் போராட்டம் நடைப்பெற்றது.

நாங்கள் சதிதிட்டம் தீட்டி பிரோம்குமாரை கொலை செய்ய முயற்சித்த விஷயம் வெளியே தெரிந்தால் ஜாதி கலவரமாக வெடித்து விடும் என்பதால் தான் DSP சம்பவம் மறுதினம் காலை எங்கள் வீட்டிற்கு வந்து என்னையும் சங்கரையும் அவர் கூறுவது போல் அவர்

கூறுவது போல் கூறவேண்டும் என்று நிர்பந்தத்தால் என்று சொன்னால் சரியல்ல.

சம்பவம் குறித்து 2 நாட்கள் தொடச்சியாக போராட்டம் நடிபெற்றது என்றால் சரிதான். அதன் பிறகு தான் இந்த வழக்கை பதிவு செய்தார்கள் என்று சொன்னால் எங்களை விசாரித்த 17ம் தேதியே போலீசார் வழக்கை பதிவு செய்துவிட்டார்கள். இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சங்கர் அழைத்தன் பேரில் தான் நான் சென்றேன். எதற்காக அழைத்தார் என்றால் தாபாவிற்கு சென்று சாப்பிட்டு விட்டு பெட்ரோல் வாங்கி வரலாம் என்று அழைத்தார். எங்கள் ஊரில் இருந்து தென்மாம்பாக்கத்தில் உள்ள பஞ்சாபி தாபாவிற்கு செல்வதற்கு திருமால்பூர், கீழ் வெண்பாக்கம், எஸ்.கொளத்தூர், தென்னல் வழியாக சீக்கிரம் சென்று விடலாம். முதலில் பெட்ரோல் வாங்கிவிட்டு பிறகு தான் சாப்பிட வந்தோம். முதலில் பாரத் பெட்ரோலியம் அடுத்து இந்தியன் ஆயில் அதற்கு அடுத்து தான் எச்.பி பெட்ரோல் பங்க் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

என்ன காரணத்தினால் முன்னால் இருந்த 2 பங்கில் போடாமல் மூன்றாவதாக இருந்த பங்கில் போட்டோம் என்றால் எப்போதும் வடிக்கையாக எச்.பி. பங்கில் போடுவது வழக்கம். சங்கர் அவராகவே தான் பாட்டிலில் பெட்ரோலை வாங்கினார் என்றால் சரிதான். தாபாவில் சாப்பிட்டுவிட்டு தென்மாம்பாக்கம் வழியாக திருமால்பூருக்கு சென்றோம். நெல்வாயிலில் இருந்து மதியம்

02.00 – 2.30 மணிக்கு கிளம்பினோம். பெட்ரோல் பங்கில் இருந்து 03.00 – 3.10 க்கு கிளம்பினோம் அங்கிருந்து கிளம்பி தாபாவிற்கு 3.30 மணிக்கு சென்றோம். தாபாவில் சாப்பிட்டு விட்டு மாலை 04.40 மணிக்கு கிளம்பினோம். அங்கிருந்து நெல்வாய்க்கு செல்லும் போது மாலை சுமார் 05.00 மணியிருக்கும். கோகுலை இறக்கிவிட்டு எந்த கடையில் கூல்டிரிங்ஸ் குடிக்க சென்றோம் என்றால் திருமால்பூரில் உள்ள ரமா கடைக்கு சென்றோம்.

ரமா கடைக்கு அருகிலேயே பெட்ரோல் விற்கிறார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வீட்டில் இருந்து புறப்பட்டு பெட்ரோல் போட்ட நேரம், தாபாவிற்கு சென்ற நேரம், போலீசாரிடம் கூறினோனா என்றால் பெட்ரோல் போட்ட நேரத்தையும் தாபாவிற்கு சென்ற நேரத்தையும் கூறினேன். திருமால்பூரில் இருந்து நெல்வாயிற்கு செல்லும் போது வீரக சீரக நதி பாலத்தை தாண்டி தான் சென்றோம் என்று சொன்னால் சரிதான். முதலில் நாங்கள் சென்ற போதும் அந்த பாலத்தை தாண்டி சென்றோம் என்னும் அப்போது அந்த பாலத்தில் யாராவது இருந்தார்களா என்றால் இல்லை.

நெல்வாயில் இருந்து கிளம்பி பாலத்தை கடக்கும் போது மாலை 05.10 மணியிருக்கும் என்று சொன்னால் சரிதான். அங்கிருந்து கூல்டிரிங்ஸ் குடித்துவிட்டு மீண்டும் சம்பவ இடம் வரும் போது மாலை 05.20 மணியிருக்கும். அந்த இடத்தில் நானும் சங்கரும் 2 நிமிடம் தான் பேசிக்கொண்டிருந்தோம். பெட்ரோல் பங்கில் பெட்ரோல் வாங்கிய பாட்டிலை 3.30 லிருந்து 5.20 வரை எங்கள் கையிலேயே வைத்திருந்தோம் என்று சொன்னால் சரிதான்.

சங்கரிடம் எதற்காக பெட்ரோல் பாட்டிலை கையிலேயே வைத்துக்கொண்டிருக்கிறாய் என்று காரணம் கேட்டேனா என்றால்

இல்லை. நாங்கள் செல்லும் போது தமிழரசனும் விஜய கணபதியும் எந்த திசையில் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் பிரேம்குமார் எந்த திசையில் இருந்து வந்தார் என்றால் எனக்கு திசைகள் பற்றி எனக்கு தெரியாது. திருமால்பூரில் இருந்து நெல்வாய் செல்லும் ரோடு எந்த திசையில் செல்கிறது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

நான் பணிபுரியும் கம்பனி எந்த திசையில் உள்ளது என்றால் காஞ்சிபுரத்தில் உள்ளது திசை தெரியாது. போலீசார் என்னை என்ன என்ன விசாரித்தார்கள் என்று தெரியாது என்றால் சரியல்ல. போலீசாரே திசையை எழுதிக்கொண்டர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த இடத்தில் இருந்து வந்தார்கள் என்று கூறினேன் திசையை அவர்களே எழுதிக்கொண்டனர். பிரேம்குமார் இரு சக்கர வானத்தில் சம்பவ இடத்திற்கு பள்ளூர் செல்லும் நதிக்கருகில் உள்ள அரசு பள்ளியின் பின்பிறம் இருந்து தான் வந்தார்கள்.

அரசு பள்ளியின் பின்பிறம் இருந்த சுடுகாடு திருமால்பூரை சார்ந்தது. நெல்வாயை சார்ந்தது இல்லை. நெல்வாய் சுடுகாடு வீரக சீரக நதி பாலத்தில் இருந்து 3 கி.மீ தொலைவில் தான் உள்ளது. பள்ளிக்கூடத்தின் மதில் சுவர் ஏறக்குறைய 500 மீட்டர் தொலைவில் உள்ளது. அதற்கு பிறகு வயல் வெளிதான் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் மேற்படி அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி, திருமால்பூரில் தான் படித்தேன். விடுமுறை நாட்களில் அந்த பள்ளியினுடைய கேட்டின் சாவி தலைமை ஆசிரியர் வசம் இருக்கும் என்றால் சரியல்ல பியூன் வசம் இருக்கும்.

நான் அந்த பள்ளியில் 12ம் வகுப்பு முடித்து 6 ஆண்டுகள் ஆகிறது அதனால் எந்த பியூன் வசம் சாவி இருக்கும் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் மணிகண்டன்,

சங்கர், விஜயகணபதி மற்றும் கோகுல் ஆகியோர்கள் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். இறந்து போன தமிழரசன் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான்.

சம்பவம் நடைபெறுவதற்கு முன் நாள் சங்கர் என்பவர் திருமால்பூர் காலனியை சேர்ந்த்த நவீன் மற்றம் மணிகண்டன் ஆகியோரை திருமால்பூர் தோப்பில் சந்தித்து பேசிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தமிழரசனுக்கும் பிரேம்குமாருக்கும் இடையே இருந்த பிரச்சனையை பேசி தீர்த்துவிடலாம் என்று சங்கர் சென்று நவீன் மற்றும் மணிகண்டனிடம் பேசினார் என்றும் அந்த பிரச்சனை தீராததால் தான் என்னையும் கோகுலையும் அழைத்து சென்று சங்கர் பெட்ரோல் வாங்கி வந்தார் என்று சொன்னால் அது தவறு.

ஒருவேளை நான் கூறுவது போல் சம்பவம் நடைபெற்றிருந்தார் திருவிழா நடைபெற்ற இடத்தில் இருந்து பொதுமக்கள் வந்திருப்பார்கள் என்றும் ஆதலால் நான் கூறுவது போலு எதிரிகளால் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் அது தவறு. சங்கர் பிரேம்குமாரை தீர்த்து கட்ட வேண்டும் என்று எண்ணி வாட்டர் பாட்டிலை திறந்து பிரேம்குமாரின் மீது ஊற்றும் போது அது தவறி தமிழரசன் மீதும் விஜய கணபதியின் மீதும் பட்டு தீக்குச்சியை பிரேம்குமாரின் மீது வீசும் போது அது தவறி தமிழரசனன் மற்றும் விஜய கணபதியின் மீது தீப்பரவி காயங்கள் ஏற்பட்டது என்று சொன்னால் அது தவறு.

சங்கர் மணிகண்டன், கோகுல், விஜய கணபதி ஆகியோர்கள் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் சங்கர் கவனக்குறைவால் செய்த செயலால் இந்த சம்பவத்தை

மறைப்பதற்காகவும் சங்கரை காப்பற்ற வேண்டியும் எங்கள் சமுதாயத்தை சேர்ந்த 1000 நபர்கள் கூடி போராட்டம் செய்து எதிரிகளின் மீது இந்த வழக்குபொய்யாக பதிய பட்டது என்றும் உண்மையாக நடந்திருந்தால் அன்றைய தேதியிலேயே வழக்கு பதிவு செய்திருப்பார்கள் என்று சொன்னால் அது தவறு.

எங்களை DSP விசாரிக்கும் போது அவர் கூறுவது போல் கூறுமாறு சொன்னாரா என்றால் இல்லை நடந்ததை தான் அவரிடம் கூறினோம். நாங்கள் நால்வரும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவரகள் என்றும் சங்கரை காப்பற்ற் வேண்டி சங்கரின் கவனக்குறைவால் எற்பட்ட சம்பவத்தை மறைக்க வேண்டி எதிரிகளின் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அது தவறு.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.29 19:28:08 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.